**தலைப்பு 02 – பிரதம அமைச்சர் அலுவலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 08 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 16 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 12 மூலதன செலவினங்களுக்கான மொத்தம் ரூபா 776,600,000 ஆன மொத்த தேறிய ஏற்பாடுகளில் ரூபா 742,698,537 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. அது தேறிய நிதியேற்பாடுகளின் 69 சதவீதம் தொடக்கம் 95 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. | வருடாந்த மதிப்பீடுகள் ஆகக்கூடியளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி அமைச்சின் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 03/2019 மற்றும் 05/2019 இன் மூலம் மூலதனச் செலவின விடயத்திற்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடு 25 சதவீதம் நிறுத்திவைத்தல் மற்றும் நிதி அமைச்சின் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 04/2019 இன் மூலம் மீண்டெழும் செலவினங்களை குறைந்த அளவில் பேணிச் செல்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) மீண்டெழும் விடயத்திற்கான 28 செலவின விடயங்களின் கூட்டுத்தொகையான ரூபா 88,650,000 ஆன மொத்த நிதிஏற்பாடுகளில் ரூபா 48,403,681 ஆன நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் 24 சதவீதம் முதல் 98 வரையான வீச்சில் காணப்பட்டன. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 07 மீண்டெழும் செலவின விடயங்களுக்கான ரூபா 6,250,000 தொகையான நிதிஏற்பாடு மற்றும் 07 மூலதனச் செலவின விடயங்களுக்கான ரூபா 610,100,000 கூட்டுத்தொகை யான நிதியேற்பாடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன. அதில் குறைநிரப்பு மதிப்பீட்டில் பெற்றுக்கொண்ட செலவின விடயமொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிறைவேற்றப்படாத கடமைப் பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புத்தாயிரம் சவால்களை கூட்டிணைக்கும் செயற்திட்ட அலுவலகத்தின் கீழான காணி நிர்வாக செயற்திட்டம் மற்றும் போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் அதன் பிரகாரம் செயற்படுத்தும் தேவைப்பாடு | செயற்திட்டங்களுக்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும் நாட்டில் காணப்பட்ட நிலைமை மற்றும் செயற்திட்டங்களின் தன்மையின் பிரகாரம் முறையாக செயற்படுத்தப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | யப்பான் இலங்கை ஒன்றிணைந்த பங்குடைமை செயலகத்தின் (JCPS) செயன் முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக செயன்முன்னேற்றம் உரிய வகையில் அறிக்கையிடும் தேவைப்பாடு | செயற்திட்டங்களுக்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும் நாட்டில் காணப்பட்ட நிலைமை மற்றும் செயற் திட்டங்களின் தன்மையின் பிரகாரம் முறையாக செயற்படுத்தப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி அளவில் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 85 பேர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 23 சதவீதம் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் இது சிரேஷ்ட நிலையில் காணப்படுகின்ற ஊழியர் வெற்றிடங்கள் 55 ஆக இருந்தது. அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் ஒப்பிடும் போது 15 சதவீதமாக காணப்பட்டது. | வெற்றிடங்கள் காணப்படுதாதல் நிறுவனத்தின் செயலாற்றலை மோசமாக பாதிக்குமாயின் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அவ்வாறு தாக்கமொன்று இல்லையாயின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்யும் தேவைப்பாடு | இந்நிலைமை சரியாதெனவும் அலுவலகத்திற்காக தேவையான பதவியணியினரை மீளாய்வு செய்து புதிய ஒழுங்கமைப்பு கட்டமைப்பொன்றை தயாரித்து திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் பதவியணியினரை ஆட்சேர்த்தல் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |